சொரணதொட்ட பிரதேசசபை
பதுளை மாவட்டம்

---

1. நிதிக்கூற்று

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்.

2018 ஆண்டின் நிதிக்கூற்று 2019 பெ்ரவரி மாதம் 28 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்று தொடர்பாக கணக்காய்வு அதிபதியின் அறிக்கை 2019 மே 24 திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1.2 நிலையறியப்பட்ட அபிப்ராயம்

இந்த அறிக்கையின் நிலையறிப்பட்ட அபிப்ராயப் பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களில் உள்ள விளைவுகள் தவிர்ந்த நிதிக்கூற்றுக்களில் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு சொரணதொட்ட பிரதேசசபையின் நிதி நிலை மற்றும் அன்றைய தினத்திலிருந்து முடிவடைந்த ஆண்டிற்காக அதன் நிதியில் செயற்பாடு பொதுவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலையை பிரதிபலிக்கின்றதென்பது எனது அபிப்ராயமாகும்.

1.3 நிலையறியப்பட்ட அபிப்ராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கியல் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைப்பு | கணக்கு கொடுப்பு அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்காக செலுத்த வேண்டிய ஓய்வூதிய பங்களிப்புத்தொகை ரூ..155,693 ஆக கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | மொத்த பணமும் கடன்கொடுத்தோர் என்ற பெயரில் ஒதுக்கப்பட்டிருப்பினும் இதுவரை செலுத்தப்படவில்லை. |

(ஆ) கணக்காய்விற்காக ஆதாரங்கள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| ரூ.686,829,102 பெறுமதியான 03 ஆதனங்கள் மற்றும் செலுத்த வேண்டிய வைப்புத்தொகை ரூ.1,475,165 பெறுமதியுடைய உறுதி, வரைபடம், பெறுதல் உத்தரவு, உபஅட்டவனை, நிலையான ஆதனபதிவேடு மற்றும் மிகுதியை உறுதிசெய்யும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வில் நன்றாக அவதானிப்பை செய்ய முடியவில்லை | நிதி கூற்றுக்களில் காட்டப்படும் கணக்கு மிகுதிகளை உறுதிசெய்யத்தக்கயில் ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஆதாரங்களை தேடிப்பார்த்து குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கையெடுப்பேன். |

1.4 <u>அமைவானதாக இல்லாமை</u>

<u>சட்டத்திட்டங்களுக்கு ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக இல்லாமை</u>

| சட்ட திட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்குமான சமர்ப்பிப்பு | | | அமைவாக இல்லாமை | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|---|---|
| (அ) | 1987 ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபை சட்டம் | | | | |
| | (ை) | 132 பிரிவின் ஏ மற்றும் ஓ உபபிரிவு | மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டிற்கு பிறகு பாடசாலை பை பெற்றுக்கொள்வதற்காக செலுத்தியுள்ள ரூ. 341,900 தொகைக்காக விடயப்பொறுப்பு அமைச்சரது அனுமதி பெற்றிருக்கவில்லை | சட்டத்திற்கமைய செயலாற்ற வேண்டும்.. | அமைச்சரது அனுமதி க்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| | (ை ை) | 158 மற்றும்159 பிரிவு | மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்ற்காக அறவிடப்பட வேண்டிய ரூ..637,795 நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை கட்டணம் அறவீட்டிற்காக பாவனையாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |
| (ஆ) | 1988 பிரதேசசபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி | | | | |
| | (i) | 5(3) விதி | மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் போதுமான உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படவிலலைல. | உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படவேண்டும். | உள்ளக கணக்காய்வு அலுவலர் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். |
| | (ii) | விதி 203 மற்றும் 204 | 2017 மற்றும் 2018 | விதி ஆகிய ஆண்டுகளில் கணக்கெடுப்புக்களில் இனங்காண்டுள்ள பொருட்கள் விடயத்திற்குரிததாக 59 அலகு குறைந்துள்ளமை தொடர்பாக செயற்பாடு மேற்கொள்ளப்படவிலலை. விதிகளுக்கமைய நடவடிக்கையெடுக்கப்பட வேண்டும். | கணக்கெடுப்பு குழுவின் பரிந்துரைக்கமைய நடவடிக்கையெடுக்க அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

2. <u>நிதி மீளாய்வு</u>

2.1 <u>நிதி பெறுபேறு</u>

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கமைய மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூ.1,022,489 ஆக இருந்ததுடன் அதற்கு நேர்எதிராக கடந்த ஆண்டில் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூ.145,040 ஆக இருந்தது.

2.2 <u>வருமான நிர்வாகம்</u>

2.2.1 <u>மதிப்பிடப்பட்ட வருமானம் பட்டியலிடப்பட்ட வருமானம் திரட்டிய வருமானம் மற்றும் நிலுவை வருமானம்</u>

மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்கும் கடந்தாண்டிற்கும் தொடர்புபட்ட ரீதியில் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம் பட்டியலிடப்பட்ட வருமானம் திரட்டிய வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழ்க்காட்டப்பட்டுள்ளன.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | புட்டியலிடப்பட்ட வருமானம் | திரட்டிய வருமானம் | 7திசம்பர் 311 திகதிக்கு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | புட்டியலிடப்பட்ட வருமானம் | திரட்டிய வருமானம | 7திசம்பர் 311 திகதிக்கு மொத்த நிலுவை |
| | | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. |
| i. | சோலைவரி | 87,124 | 86,592 | 55,240 | 31,352 | 87,124 | 86,593 | 61,203 | 25,390 |
| ii. | ஏக்கர்வரி | 9,600 | 9,600 | 5,167 | 4,434 | 9,600 | 9,601 | 5,270 | 4,331 |
| iii | அனுமதிப்பத் திரகட்டணம் | 500,000 | 491,800 | 491,800 | - | 380,000 | 493,754 | 493,754 | - |
| iv. | வாடகை | 388,800 | 420,165 | 396,697 | 422,849 | 468,800 | 395,412 | 358,600 | 36,811 |
| v. | நீர்க்கட்டணம் | 1,600,000 | 1,907,150 | 1,862,870 | 44,280 | 1,300,000 | 1,854,570 | 1,839,315 | 15,255 |
| | மொத்தம் | 2,585,524 | 2,915,307 | 2,811,774 | 502,915 | 2,245,524 | 2,839,930 | 2,758,142 | 81,787 |

2.2.2 <u>வருமானம் திரட்டும் செயலாக்கம்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| வருடத்திற்கு அதிகமான காலந்தொடக்கம் அறவிட வேண்டியுள்ள வருமான ரீதியான கடன்பட்டோர் தொகை ரூ. 14,279,928 அறவிடப்படவில்லை | பணம் கொடுக்க வேண்டியோரை இனங்கண்டு நிலுவை வருமானம் அறவிட வேண்டும். | விசாரணை சரியாகிறது. |

2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| (அ) நீதிமன்ற தண்டப்பணம்<br>மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப்பணமான ரூ. 2,200,000 அறவிடப்படவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். . | 2019 ஆண்டில் அறவிடப்படவுள்ளது. |

(ஆ) முத்திரைக்கட்டணம்

| | | |
|---|---|---|
| மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டியிருந்த முத்திரைக்கட்டணமான ரூ. 1,329,850 அறவிடப்படவில்லை. | நிலுவை முத்திரைக்கட்டணம் அறவிடப்பட வேண்டும். . | 2019 ஆண்டில் அறவிட ப்படவுள்ளது |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1. செயலாக்கம்

பிரதேசசபை சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் உள்ள பொதுமக்கள் சுகாதாரம் பொதுபயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பான விடய்ஙகளை முறைமைப்படுத்தல் மற்றும் நிர்வாகம் செய்தல் மக்களது வசதியான பயன்பாடு வசதி மற்றும் நலன்புரி ஆகியன சபையினால் செய்யப்பட வேணடியிருந்த விடயங்கள், இவை நிறைவேற்றப்படுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழக்காட்டப்படுள்ளது.

(அ) உபவிதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| பிரதேசசபை சட்டத்தின் 126 பிரிவிற்கமைய பிரதான விடயங்கள் 30 ஐ நிறைவேற்றுவதற்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டியிருப்பினும் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது விடயங்கள் 11 இற்காக உபவிதிகள் ஆக்கப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகள் ஆக்கப்படாத விடயங்களுக்காக உபவிதிகள் ஆக்கப்பட வேண்டும். | வருங்காலத்தில் உபவிதிகள் ஆக்க நடவடிக்கை எடுப்பேன். |

(ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| 2012 திசம்பர் 05 திகதி இலக்கமுடைய 1178/45 இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமான பத்திரிகைக்கமைய பிரதேசசபை திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பாக உபவதிகளை தழுவியிருப்பினும் கழிவு வரி அறவிட வேண்டிய ஸ்தலங்களை இனங்கண்டு வரி அறவிடுவதற்கு 2018 டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது கூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திண்மக்கழிவு முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டும். | சுரியான குப்பை கூடைகளை மக்களுக்கு வழங்குவதற்கும் வருங்காலத்தில் திண்மக்கழிவு முகாமைத்துவம் செய்வது குறித்து அலுவலருக்கு அறிவுறத்தப்பட்டுள்ளது. |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவுறுத்தப்பட்டிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தக்கூடிய வகையில் இனங்கண்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கம் தொடர்பான குறிக்காட்டிகள் இனங்காணப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கத்தை அளவிடுவதற்கான சுட்டிகளை இனங்கண்டு அதற்கமைவாக வருடாந்த இலக்குகளை அடைவதற்காக விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கத்தை அளவிடுவதற்கான சுட்டிகளை இனங்கண்டு அதற்கமைய செயலாற்றுவேன். |

3.2 <u>முகாமைத்துவத்தின் விணைதிறனற்ற தன்மை</u>

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆண்டு துன்ஹிந்த நீர்வீழ்ச்சி நுழைவு பாதை அபிவிருத்தி செய்யும் வேலையின் கையிருப்பு தொகையான ரூ.68,051 இரு தடவைகள் செலுத்தியதால் ரூ. 68,051 தொகை நட்டமானது சபை நிதியத்துக்கு ஏற்பட்டிருந்தது. | கூடுதலாக செலுத்தியருந்த கையிருப்பு தொகை அறவிடப்படல் வேண்டும். | குறித்த கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு அறிவித்து பய அறவீட்டை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்னே். |
| (ஆ) | ஒரு வருடத்திற்கும் மேலாக செலுத்தப்படாதுள்ள கடன்கொடுத்தோர் மிகுதியான ரூ..15,910,328 தொகை சரிசெய்யவில்லை. | செலுத்த வேண்டிய மிகுதியை சரிசெய்வதற்கு நடவடிக்கையெடுப்பேன். | விசாரணை சரியாகின்றது. |

3.3 <u>மனிதவள முகாமைத்துவம்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு 04 பதவிகளுக்காக 15 மேலதிக பயணியாளர்கள் இருந்தனர். | புணியாளர்களை அனுமதித்துக்கொள்ள வேண்டும். | இவ்வாண்டில் மேலதி பணியாளர்களை அனுமதிப்பதற்கு நடவடிக்கையெடுப்பேன். |
| மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு சபையின் 06 பதவிகளுக்காக காணப்பட்ட 06 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கையெடுப்பேன். |

| | | |
|---|---|---|
| சபையில் சேவையாற்றி ஓய்வுப்பெற்ற அலுவலரிடமிருந்து அறவிட வேண்டிய ரூ. 238,307 கடன் மிகுதி அறவிடப்படவில்லை. | சபை ஊழியர்களிடம் நிலுவை கடன் மிகுதி அறவிடப்பட வேண்டும். | கடன் மிகுதி அறவிடுவதற்காக ஓய்வூதிய திணைக்களத்துக்கு விபரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

3.4 வருடாந்த கொள்வனவு திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டிற்காக கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு திட்டம் தயார்செய்யப்பட வேண்டும். | வருங்காலத்தில் தயார்செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 4. <u>கணக்கீடுகள் தொடர்பான செயற்பாடு மற்றும் நல்லாட்சி</u>

### 4.1 <u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி</u>

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2009 ஆண்டின் ஜூன் மாதம் திகதி மற்றும் இல. டிஎம்.ஏ ∴.2009(01) கொண்ட உள்ளக கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கைக்கமைவாக காலாண்டுக்கு ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி கூட்டம் நடாத்தப்பட வேண்டியிருப்பினும் மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி கூட்டங்கள் .2 மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களுக்கமைவாக கருமமாற்ற வேண்டும். | எதிர்வரும் காலங்களில் உரியவாறு செயற்குழுக்களை நடாத்துவதற்கு நடவடிக்கையெடுப்பேன். |